## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.86/2017

2026 –ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 20.04.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. செல்வராஜ் (PW–1 ) | வயது | : | 58/2026 |
| க/த பெயர் | : | திரு. சொக்கலிங்கம் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | ஓவேல்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) எனது தகப்பனார் யார் யாருக்கு 3 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் கருணாநிதிக்கு தான் எழுதி கொடுத்தார். என்னென்ன சர்வே எண்ணிற்கு 3 இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 3 இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் எந்தெந்த ஆவணத்தை எனது தகப்பனார் ரத்து செய்தார் என்றால் 3 ஆவணத்தையும் ரத்து செய்துவிட்டார். அந்த ஆவணங்கள் ரத்து செய்த பின்னர் அதில் உள்ள சொத்துக்களை யார் யாருக்கு விற்பனை செய்தார் என்றால் கருணாநிதி தங்கம் என்பவருக்கு விற்பனை செய்தார் மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது.
2) என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.541, விஸ்திரணம் 23 குழி சொத்தை கருணாநிதி மாயகிருஷ்ணனிடம் 2013 ல் விற்பனை செய்தது தவறு என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்திற்கான பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் எனது அப்பா பெயரில் இருந்தது. கருணாநிதி மாயகிருஷ்ணனிடம் விற்பனை செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பா உயிருடன் இருந்தபோது தாவா சொத்து தொடர்பாக ஏதேனும் வழக்கு நடந்ததா என்றால் எங்கள் வயலில் துரைராஜ் வேலை செய்தபோது இறந்ததற்கு இழப்பீடு கேட்டு திருச்சி தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது.
3) தாவா சொத்தான 23 குழி மாயகிருஷ்ணன் அனுபவத்தில் எந்த வருடத்திலிருந்து உள்ளது என்றால் 2017 இல் வேலி அடைத்து அவரது

அனுபவத்தில் உள்ளது. எனது அப்பா இறந்த பின்னர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அவரது வாரிசுதாரர்கள் பெயரில் பட்டா பெயர் மாற்ற வேண்டி மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. கருணாநிதி நஷ்ட ஈடாக ரூபாய் 40,000/-யை வட்டாட்சியர் அலுவலகத்தில் 2016 இல் செலுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கருணாநிதி உயிருடன் இருந்தபோது எனது அப்பா, நான், குமார் ஆகியோர் தாவா சொத்தானது கருணாநிதிக்கு சொந்தமானது என விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றால் இல்லை.

4) 2023 இல் விடுதலை பத்திரம் எழுதிய சமயத்தில் ரூபாய் 40,000/-யை மாயகிருஷ்ணனிடமிருந்து நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்றால் இல்லை. தாவா சொத்தை தவிர இதர சொத்துக்கள் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனார் இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்த பின்னர் அந்த சொத்துக்கள் தொடர்பாக பட்டா பெயர் மாற்றம் ஏற்படுத்தி கெண்டாரா என்றால் இல்லை. கருணாநிதிக்கு தாவா சொத்துக்களை இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்து நீண்ட காலம் அவரது அனுபவத்திற்கு பின்னர் மாயகிருஷ்ணனுக்கு கருணாநிதி கிரயம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

5) தாவா சொத்துக்கள் நாளது தேதிவரை கருணாநிதி பெயரிலும், மாயகிருஷ்ணன் பெயரிலும் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரியல்ல. கருணாநிதிக்கு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்த பின்னர் அந்த ஆவணத்தை ரத்து செய்ய எனது தகப்பனாருக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மாயகிருஷ்ணனிடம் மேலும் பணம் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக தாக்கல் செய்த இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.21 16:17:43 +0530

District Munsif
Mannargudi.